# பாலிந்தநுவர பிரதேச சபை

# களுத்துறை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 23 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 14 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, பாலிந்தநுவர பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாலிந்தநுவர பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

வேலைக் கணக்கிலிருந்து சாதாரண கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த ரூபா 625,000 தொகையான சாதாரண கணக்கு வரவு வைக்கப்பட்டு வேலைக் காசுக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருக்கையில் அரசாங்க மானியக் கடன்கொடுத்தோர் கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,499,615 ஆக இருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 685,515 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ |
| (i) | வீதவரியும் வரியும் | 1,625 | 497 | 45 |
| (ii) | வாடகை | 3,041 | 3,956 | 102 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 299 | 204 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | 4,444 | 3,991 | -- |

**2:2:2 வீத வரி**

2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை 113 கட்டிடத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் இவற்றில் 7 இற்கு மாத்திரமே இணக்கச் சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. அக் கட்டிடங்களின் வீதவரியை மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ளும் வரை தற்காலிக மதிப்பீடொன்றையேனும் மேற்கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 ஏனைய வருமானம்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் மூலம் பதிவாகியுள்ள ஹொட்டேல், சிற்றுண்டிச்சாலை ஆகியவற்றிலிருந்து 1% ஆன வரித் தொகை அறவிடப்பட வேண்டிய போதிலும் 2006 ஆம் ஆண்டு முதல் பதிவாகியிருந்த விடுமுறை விடுதியிலிருந்து அவ் வரித் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 2,587,750 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 2,262,472 |

**2.3 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

மீளாய்வாண்டின் போது 1 ½" X 8" அளவிலான 11 ஹியூம் குழாய்களும் 1 ½" X 4" அளவிலான 11 ஹியூம் குழாய்களும் ரூபா 79,200 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த ஹியூம் குழாய்களைக் கொள்வனவு செய்வதற்கிருந்த தேவைப்பாடு அல்லது இது தொடர்பான பரிந்துரை அல்லது கோரல் கோவையிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டிராததுடன் கொள்வனவு செய்யப்பட்ட சகல ஹியூம் குழாய்களும் தொழிநுட்ப உத்தியோகத்தரின் பெயருக்கு விநியோகிக்கப்பட்டிருந்தன. எனினும், அக் குழாய்கள் எந்த வழிக்காகப் பயன்படுத்தப்பட்டவை என்பது குறித்து குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**2.4 பாதீடு**

2 வருமான விடயங்கள் மற்றும் 5 செலவின விடயங்களில் 41% தொடக்கம் 279% வரையிலான இடைவெளியில் சாதகமான முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன் 3 வருமான விடயங்கள் மற்றும் 2 செலவின விடயங்களில் 36% தொடக்கம் 77% வரையிலான இடைவெளியில் பாதகமான முரண்களும் வெளிப்படுத்தப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை.

**2.5 கொள்வனவுத் திட்டம்**

வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.6 உள்ளகக் கணக்காய்வு**

1988 பிரதேச சபை விதிக் கோவையின் 5 ஆம் விதியின் 7 ஆம் உப விதி மற்றும் V இன் பிரகாரம் நிதி மற்றும் களஞ்சியக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக போதிய உள்ளகக் கணக்காய்வொன்று நடாத்தப்படுவது தலைவரின் செயற்பாடான போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்து முகாமைத்துவம்

(ஈ) பாதீடு